சுக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

PERSONAL CLASSES
B.M.C. FRONT LANE
JAFFNA

A/L 89, 90 & 91
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

PHY. சத்தியசீலன்
CHE. மதுரமணி
BOT. சர்வானந்தா
ZOO. ஈஸ்வரதாசன்
PURE. APP. } விஜயகுமார்

# உதயன்

விலை
ரூ2/50

A/L 91
பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது

A/L 89
மாணவர்களுக்கு
வகுப்புகள் ஆரம்பமானதும்
பயிற்சிப் பரீட்சைகள்
நடைபெறும்.

PERSONAL CLASSES
B. M. C FRONT LANE,
JAFFNA.

சுடர்: 4 சுக்கில ஆனி மீ 20 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஃதா பிறை 29 (04 . 07 . 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 178

## கடந்த இரு தினங்களில் மட்டும்

# 25,000 அடையாள கார்ட்டுகள்

# தெற்கில் பறிமுதல்!

## தேடுதல் நடவடிக்கையைக் குழப்ப ஜே. வி. பியினரின் புதிய தந்திரம்

கொழும்பு, ஜூலை 04

தென்னிலங்கையில் கடந்த இரு தினங்களில் மட்டும் பொது மக்களிடமிருந்து 25 ஆயிரம் தேசிய அடையாளக் கார்ட்டுக்களை ஜே.வி, பி. தீவிரவாதிகள் பறிமுதல் செய்திருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளைச் செயல் இழக்கச் செய்வதற்காகவே இந்த புதிய தந்திரோபாயத்தை ஜே. வி. பியினர் மேற்கொண்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

கண்டி, பதுளை, மாத்தறை, பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள பல இடங்களில் பரவலாக ஒரே நேரத்தில் 'அடையாளக் கார்ட் பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

பதுளசிரிகம மஹிலகஸ் தென்ன, சனேபெலால' பொலன்னறுவை, காலி, ஹோமகம ஆகிய இடங்களில் இந்த நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்வப்பட்டது.

ஹோமகமவில் உள்ள ஆயுதப்படையினரின் விடுதிகளுக்குச் சென்ற தீவிரவாதிகள் விடுதிகளில் இருந்த படையினரினதும் அவர்களது உறவினரினதும் அடையாளக் கார்ட்டுகளைக்கூட மிரட்டிப் பறிமுதல் செய்துள்ளனராம்.

தேடுதலின் போது தீவிரவாதிகளை படையினரை அடையாளம் காண்பதை தவிர்த்துக்கொள்வதற்காகவே பாரிய அளவில் அடையாள கார்ட் பறிமுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் தேடுதலின் போது தீவிரவாதிகளும் அடையாளக் கார்ட்டுகளை பறிகொடுத்தவர்கள் என்ற சாட்டில் அடையாளம் காணப்படா

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அடையாளத்தைப் பறிச்சால் மனிதரை மாற்ற முடியுமே...? கும்பவிலை கோவிந்தா என்று தாங்கள் தப்பத்தான் இந்த வழி...!

## மற்றொருவர் உயிரிழந்தார்

மஹியங்கனை கம் உதாவ விழாவில் ஞாயிறன்று இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆக அதிகரித்தது.

அந்த இடத்தில் ஒருவர் உயிரிழந்தார் காயமடைந்தவர்களில் இன்னொருவர் பின்னர் மரணமானார். (உ.எ)

## கலைப்பீட மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மூன்றும் ஆண்டு மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

கைதான பல்கலைக்கழக கலைப்பீட மூன்றும் ஆண்டு மாணவன் மொறயஸ் என்பவரை விடுதலை செய்யக் கோரியே இப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. (ஓ-3)

### சுபநேரம்

04—07—1989
ஆனி — 20
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
01.27 முதல் 11.57 வரை
ராகுகாலம்:
02.57 முதல் 04.27 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### ஜனநாயக ரீதியில் செயற்பட முட்டுக்கட்டை

# ஈழப் பிரகடனம் குறித்து இம்மாதம் திருமலையில் முடிவு

## பத்திரிகையாளர் மாநாட்டில் பத்மநாபா

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஸ்ரீலங்கா அரசு ஜனநாயக ரீதியாக நாம் செயற்படுவதற்கு அனைத்து முட்டுக்கட்டைகளையும் போட்டு வருகிறது.

இந்த நிலையில் நாம் சுதந்திர ஈழத்தைப் பிரகடனம் செய்யும் நிலைக்குத் தள்ளப் படுவோம்.

இம் மாதம் திருகோணமலையில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய மன்றத்தின் கூட்டத்தில் இலங்கை அரசின் தற்போதைய நடவடிக்கைகளை அவதானித்து சுதந்திர ஈழப் பிரகடனம் செய்வது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

ஈழப் புரட்சிகர முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ் வின்) செயலாளர் நாயகம் திரு. கே. பத்மநாபா இவ்வாறு நேற்று தெரிவித்தார்.

அசோக் ஹோட்டலில்நேற்று பிற்பகல் அவர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.



பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்துத் திரு. பத்மநாபா மேலும் தெரிவித்ததாவது:—

இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான போது இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது.

அதன் பிரகாரம்தான் நாம் ஆயுதத்தைக் கைவிட்டு ஜனநாயக முறையை மேற்கொண்டோம்.

ஆனல் தேவையேற்படின் நாம் மீண்டும் ஆயுதப்போராட்டத்துக்கு செல்லத்தயாராக இருக்கிறோம்.

இலங்கை அரசு ஒப்பந்தப் பிரகாரம் உரிமைகளை மாநில அரசுக்கு வழங்கவில்லை. அது மட்டுமல்லாது தற்போதைய அதன் நடவடிக்கை மூலம் எமது ஜனநாயகத் தன்மையை அழிக்கவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வெளியூர் தொலைபேசிச் சேவை நான்கு நாட்களாக 'அவுட்'

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். தபாலகத்திலிருந்து வெளியூர்களுக்கான தொலைபேசிச் சேவைகள் கடந்த நான்கு நாட்களுக்கு மேலாக முடங்கியுள்ளன.

அனுராதபுரம் பரிவர்த்தனை நிலையத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறுகள் காரணமாகவும்—

ஊழியர் பற்றுக்குறை காரணமாகவுமே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. (ஓ-10)

# வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெரும் ராணுவ நடவடிக்கை?

கொழும்பு, ஜூலை 4

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்தியப் படையினர் முன்னர் எப்போதும் இல்லாத அளவில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை இரண்டொரு தினங்களில் நடத்த விருப்பதாகத் தெரியவருகிறது.

கொழும்பில் ஸ்ரீலங்கா பாதுகாப்பு படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி. ஏஜென்ஸி செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

வன்னி, முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் பெரும் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக மேலதிகமாக புதிய படைப்பிரிவுகள் குவிக்கப்பட்டிருப்பதாகவும் —

இந்த நடவடிக்கைகளின் போது உபயோகப்படுத்துவதற்காக — ரஷ்யத் தயாரிப்பான — பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்கள் நான்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இந்திய அமைதிப் படையினர் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரும் ஊர்ஜிதப்படுத்தினர்.

தூதரக முதலாவது செயலாளர் டாக்டர் ஜெய்சங்கர் இதுபற்றிக் கூறுகையில் —

''குடிமக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கு முகமாக வீடுகளினுள் இருக்கும்படி வவுனியா, முல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## "புயல் காற்று" புல்மோட்டை முதல் கிளிநொச்சி வரை!

புதுடில்லி, ஜூலை 4

திருகோணமலையின் வடபகுதியான புல்மோட்டையில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் வரை இந்திய அமைதிப்படை தற்போது மேற்கொண்டுள்ள தீவிர இராணுவ நடவடிக்கைக்கு 'புயல் காற்று' (Storm) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஹிந்தியில் இதற்கு 'Toofan' எனப் பெயரிடப்பட்டது.

இப்பிரதேசத்திற்குள் முல்லைத்தீவு, வவுனியா, மாவட்டங்களும் வருகின்றன.

இப்பிராந்தியத்தில் இந்திய அமைதிப்படையின் ஒரு பிரிவும் 2 படையணிகளும் மொத்தமாக சுமார் 20 ஆயிரம் ஜவான்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

தேசிய அடையாளக் கார்ட்டின் புகைப்படப் பிரதியை எடுத்து வைக்குமாறும், அதன் இலக்கத்தைக் குறிப்பிட்டு வைக்குமாறும் அரசு நேற்று அறிவித்தது.

அடையாளக் கார்ட் காணமற் போனல் உடனடியாக அது குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டது. (ஓ)

## நாவலப்பிட்டியில் தீவிரவாதி கைது

கொழும்பு, ஜூலை 4

நாவலப்பிட்டியில் தமிழ்த் தீவிரவாதக் குழு ஒன்றின் உயர்மட்ட உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

தோட்டப்பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

## வங்கிகளில் மீண்டும் மீளக் குடியமர்தல் பணம்

வட பகுதியில் சகல இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகளில் மீண்டும் மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இமை நாட்களிலேயே இதனை வழங்குவதற்கு வங்கி நிர்வாகங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

இது தொடர்பான கிளை முகாமையாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றும் அண்மையில் நடைபெற்றது.

அடுத்த வாரம்முதல் இக் கொடுப்பனவுகள் வழங்குவது ஆரம்பமாகலாம் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-10)

## ஜீ.சி.ஈ உயர் பரீட்சைக்கு இதுவரை ஏற்பாடு ஏதுமில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஜீ. சி. ஈ. (உயர்தர)பரீட்சைக்குரிய ஏற்பாடுகளை இதுவரை பரீட்சைத் திணைக்களம் மேற்கொள்ளவில்லை என அறியவந்துள்ளது

அடுத்த மாதம் 19 ஆம் திகதி முதல் ஜீ. சி, ஈ. (உயர்தர) பரீட்சைகள் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

பெரும்பாலும்இப் பரீட்சை பின்போடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே நேரம் யாழ் கல்வித் திணைக்களம் இப்பரீட்சைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது. (ஓ-4)

### நேற்று முன்தினம் மட்டும்

## புதிய பஸ் சாரதிகள் இருவர் உட்பட 10 பேர் கொலை!

கொழும்பு, ஜூலை 4

கடந்த ஞாயிறு (நேற்று முன்தினம்) மட்டும் தென் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களில் இரண்டு பஸ் சாரதிகள் உட்பட 10 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மாத்தளைப் பகுதியில் அண்மையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட இ. போ. ச. சாரதிகளான ஏம். ஜயசுந்தர. எச். எம். திலகரத்தின ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

லக்கலவில மஹிந்த என்பவர் கொல்லப்பட்டார்.

அனுராதபுரம் பொலீஸ் பகுதியில் மூவர் சுட்டுக்கொல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பிரதிநிதி யாழ். மாவட்டத்தில் ஆய்வு

### அபிவிருத்திக்கு உதவுவதற்காக

யாழ்ப்பாணம், ஜூலை 4

நோர்வே ''கியூ பெக்ஸ்'' அமைப்பின் பிரதிநிதி ஒருவர் யாழ். மாவட்டத்தில் ஆய்வு ஒன்றை நடத்தினர்.

வடக்கு — கிழக்கு அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நிறுவனமான ''கியூ பெக்ஸ்'' நிறுவனம் நோர்வே பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் திரு. சண்முகரத்தினத்தை இங்கு அனுப்பி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரியிருந்தது.

இதன்படி இவர் இங்கு கடந்த வாரம் வந்து பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களையும் சந்தித்து விபரங்களைச் சேகரித்துச் சென்றுள்ளார். (ஓ-3)

### உறவைச் சீராக்குவது குறித்து

## பிரதமர் ராஜீவுடன் தொண்டமான் பேசுவார்

கொழும்பு, ஜூலை 4

புடைவைக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் புதுடில்லியில் இன்று (செவ்வாய்) ஆரம்பமாக உள்ள சார்க நாடுகளின் நெசவுத் தொழில் துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வார்.

இந்தியப் பிரதமர் உட்பட பல உயர் அதிகாரிகளுடன் பேசி இலங்கை இந்திய உறவைச் சீராக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தப்போவதாக திரு. தொண்டமான் சொன்னார்.

இந்தியாவைப் பகைத்துக்

(6ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

28 கேஸ் 10 அடி அலுமினியம் நெளியல் தகரம் 26 கேஸ் 9 அடி சல்வனைசு தகரம் 28 கேஸ் 8 அடி, 3 அடி பிளேன் தகரம் பழைய மரங்கள் மற்றும் ஏனைய பொருட்களும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு; S.Kandasamy, Navaly North Nachimarkovilady, Manipay. (11429)

### WANTED

Wanted Suitable bride groom between 32 - 36 for doctor bride. Apply with horoscope No 555 C/o Uthayan, Jaffna. (3005)

### தவறிவிட்டது

நாகேந்திரசர்மா கமலநாதனின் அடையாள அட்டை 702140617 V சங்கானைச் சந்தையில் (மார்கட்டில்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து காசிப்பிள்ளை கடையில் ஒப்படைக்கவும். [1038]

இறகேந்திரசேகரம் சண் ஆகிய எனது அடையாள அட்டை (362301360V) 29 - 06 - 89 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [11438]

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாளர் வயது 30 MSC மணமகனுக்கு படித்த சீதனமுள்ள மணமகள் தேவை. தென்மராட்சி பகுதி விரும்பத்தக்கது. தொடர்பு ABCDE 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. [1036]

யாழ் இந்து வேளாண் குலத்து U. K. யில் 1 C.M A படித்துக் கொண்டு இருக்கும் 28 வயது நிரம்பிய செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு சாவகச்சேரிப் பகுதியில் மணமகள் தேவை. தொடர்பு: ABCDE 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி, [1035]

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாளர் 24 வயது Civil Engineer ருக்கு B. S. C. பட்டதாரி கிரகபாவம் கூடிய மணமகள் தேவை. தொடர்பு: ABCDE 328, நாவலர்ரோட், ஆனைப்பந்தி. [1037]

### லைசென்சைக் காணவில்லை

மூளாய் திரு.நா முருகையா ஆசிரியரது வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் (லைசென்ஸ்) யாழ் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [11439]

## ★ மீனும் படகும்

வடமராட்சி, ஜூலை 4

புலோலி இராணுவ முகாமில் இருந்து அனுமதிப் பத்திரம் பெறாமல் மீன் பிடிக்கச் சென்றவர்களுடைய படகும் மீனும் கடலில் தடுத்து வைக்கப்பட்டன.

சம்பந்தப்பட்டவர்கள் புலோலி முகாமில் அனுமதிப் பத்திரம் பெற்றபின் பே மீனும் படகும் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

திருப்பிக் கொடுக்கப்பட்ட மீன் மிகவும் பழுதடைந்ததினால் மீனவர்கள் அவைகளை வீசவேண்டியதாயிற்று. (ச-160)

## விற்பனைக்கு

கொழும்பில் பாதுகாப்புடன் வாழ்வதற்கு மின்சாரம், தண்ணீர் சேவை ஆகிய சகல வசதிகளையும் கொண்ட 3½ பேர்ச்சில் அமைந்துள்ள சிறிய வீடொன்று கிருலப்பனை கொழும்பு 6இல் விற்பனைக்கு உண்டு.

பாதுகாப்பான சூழலையும் அநேக பூர்வமான அயலவர்களையும் உடைய இவ் வீட்டுடன் 47 பேர்ச் வெறும் காணியும் உண்டு

ஹைலெவல் ரோட்டில் இருந்தும் பொலிஸ் நிலையத்திலிருந்தும் 100யார்தூரம்

விரும்புவோர்

தபால் பெட்டி 12,
நுகேகொட

என்ற விலாசத்துக்கு மனுச் செய்யவும்

கண்களில் தோன்றும் காட்சிகளை கண்கவர் கலர் வண்ணப் பிரதிகளாக

வீடியோ ✱ கமெரா (ஸ்ரில்)

மூலம் சகல நிகழ்ச்சிகளையும் நீங்கள் பார்த்து மகிழ அழையுங்கள்!

## 'ரகு போட்டோ ரெக்னிக்'

ஐந்து ஸ்ரில் கமெரா முதல் வீடியோ கமெரா வரை - சகல திருத்த வேலைகளும் 40 வருட கால அனுபவ வல்லுனரால் திருத்திக் கொள்ளவும் - உங்களுக்குத் தேவையான கமெராக்களை வாங்கவும்

நாடவேண்டிய ஸ்தாபனம்:

**RAGU PHOTO TECHNIC**

301, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.
மேல் மாடி
(கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில்) (11437)

## ஓராண்டு நினைவு அஞ்சலி

| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
| 24 05-1966 | 15 07-1988 |

திரு, பொ. உதயநாதன்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டது. உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு என்றும் மறையாது.

பிள்ளையார் கோவிலடி
நவற்கிரி,
புத்தூர் மேற்கு.

உங்களைப் பிரிந்து வாடும்
அம்மா, மனைவி,
பிள்ளைகள், மாமா, மாமி,
அக்காமார், அண்ணன்,
உறவினர்கள்.

(1138)

## பதவி வெற்றிடம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 4

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் இரு உதவிச் செயலாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்படுபவர்கள் பளை, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நியமிக்கப்படவுள்ளனர். [இ-117

## 14 பேரின் மரணத்துக்கு ரெலோ கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

கடந்த 28 ஆம் திகதி கொடிகாமத்துக்கும், பளைக்கும் இடையிலுள்ள மிருசுவிலில் நடத்தப்பட்ட தாக்குதல்களினால் இரு மினிபஸ்களில் சென்றவர்களான ஈழத்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் அகால மரணமடைந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் மக்களுக்கு பூரணபாதுகாப்பு வழங்குவதற்காகவும், அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்காகவும், கொடும் புயல்களையும், காட்டாற்று வெள்ளங்களையும் தாங்கிச் செயற்பட்டு வருபவர்கள் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மக்கள் கண் முன் தெரியாமல் மண்ணோடு மண்ணாகி வருகிறார்கள்.

இன்னும் இந்த நிலைப்பாடு நிறுத்தப்படாமல் தொடருமானால் மரணங்களும், மர்மங்களும் தொடரப்போவது திண்ணம் எம் இனம் மீண்டும் - மீண்டும் அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

05 - 07 - 1989



திருமதி பாக்கியலட்சுமி ஆறுமுகம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 - 06 - 1906 | 04 - 06 - 1989 |

எமது தாயாரின் மறைவுத் துயரில் பங்கு கொண்டோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு (05 - 07 - 89) புதன்கிழமை நடைபெறவிருக்கும் சபிண்டீகரண கிரிகைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

265, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (11441)

## வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகள்

ஜேர்மனி, இலண்டன் செல்லவிரும்பும் பிரயாணிகளுக்கு (Baulkan) Baul Garan ஏயாலயன் மூலம் விசேட கழிவுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு விமானரிக்கற்றுடன் ஆசனங்கள் பதிவு செய்து கொடுக்கப்படும்.

● 16 வயதுக்கு உட்பட்டவர்கள் ஜேர்மனிக்கு செல்ல விமான ரிக்கற் ஒழுங்குகள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு இலவச போக்குவரத்து வசதிகளுடன் செய்து கொடுக்கப்படும்.

★ உலகில் எந்த நாட்டிற்கும் (India, Australia Canada, America, Singapore, Bangkok, மற்றும் நாடுகளுக்கும்) கொழும்பில் பெறும் கட்டணத்திலேயே யாழ்ப்பாணத்தில் டிக்கட் வழங்கப்படும்.

★ Confirmation, Reconfirmation, Cancellation of Tickets ஆகியவைகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ பாஸ்போட், வொண்டிங், Extension ஆகியவைகளும் துரிதமாகச் செய்து கொடுக்கப்படும்.

● பலாலி விமான நிலையத்துக்கு எமது அலுவலக கார் வாடகைக்கு விடப்படும்.

**MACK TRAVELS (PVT) LTD,**
No. 8, FIRST LANE,
POINT PEDRO ROAD, JAFFNA.
(சி/3015)

## வேலை வாய்ப்பு

(1) கிறீக் கப்பல்
(2) சிங்கப்பூர் கப்பல்

பலதரப்பட்ட வேலைகளுக்கும் ஆட்கள் தேவை.

★ உடனடிப் பயணம் ★

● ஓமான்
ரெயிலேர்ஸ்

குவைத் - சிங்கப்பூர்
பணிப்பெண்கள்

★ விரும்புவோர் நேரில் வரவும் ★

க. இந்திரலிங்கம் (சந்திரன்)

நிரோஷன் என்ரபிறைஸ்
பருத்தித்துறை வீதி
மயிலிட்டி, காங்கேசன்துறை.
(TB வைத்தியசாலை அருகில்)
[11436]

## தகவல் பெட்டி

மானிப்பாய் ஜூலை 4

மருதனுமடம் கோட்டக் கல்வி நிறுவனம் தொடர்பான குறைபாடுகளை திரட்டும் நோக்குடன் அதிபர்கள் ஆசிரியர்கள் தம் கருத்தை தெரிவிக்கக் கூடிய முறையில் தகவல் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதனை கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரன் ஒழுங்கு செய்துள்ளார். (க-90)

## இடைக்காடு இந்துக் கழகம் நடத்தும் போட்டி

அச்சுவேலி ஜூலை 4

இடைக்காடு இந்து நெறிக் கழகம் அபிராமி அந்தாதி மனனப் போட்டி, சமய அறிவுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

அச்சுவேலி கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்தில் மாணவர்களிடையே இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. (ச-11)

## நன்றி நவிலல்

### அமரர் திருமதி விஜயலட்சுமி ஆறுமுகம்

திருமதி விஜயலட்சுமி ஆறுமுகத்தின் இறுதிச் சடங்குகளின்போது உற்ற துணையாக அருகில் நின்று உதவிய உறவினர்களுக்கும், பலவகைகளிலும் பேருதவிகள் புரிந்த அயலவர்களுக்கும், அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிற் சமுகமளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

41/60, ஆஸ்பத்திரி முன்ஒழுங்கை,
நாயன்மார்கட்டு. (1137)

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அரியாலையூர்
திருமதி இந்திராணி சிவபாலசிங்கம்
அவர்கள்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 - 05 - 1948 | 05 - 06 - 1989 |

பிள்ளைதனைப் பெற்றாள் பிராணனவளையே விட்டுவிட்டாள்
அள்ளி அணைத்தெடுத்தே அன்பாக வோர்முத்தம்
பிள்ளைக் கனிக்குப் பிரியமுடன் பேர்முத்தம்
உள்ளக் களிப்புடனே உச்சிமோந்து ஓர் முத்தம்!
கொடுக்க விடாதவனைக் கூற்றுவனே கொண்டுசென்றான்
பிரசவிக்கச் சென்றவள்தான் பிராணனையே விட்டுவிட்டாள்!
மணம்முடித்தே ஈராண்டு வாழ்ந்தே நிறையவில்லை!
மனம்மடிந்தே நற்றுணைவன் மாதுயரம் கொள்கின்றார்
பெற்றோர் புலம்புகிறார் பேதலித்தே வாடுகிறார்
சுற்றம் கலங்கித் துடிக்கின்றார் சோகமுற்றே
கூடப் பிறந்தோர்கள் மைத்துனிமார் மருமக்கள்
சோகப் புயலடித்தே சோர்ந்துவிழ இந்திராணி
வேகமாய்ச் சென்றாள் விதியின் விளையாட்டால்
விதியே விதியென்றே வெந்துகண்ணீர் விடுகின்றார்!

இன்று 4 - 7 - 89 செவ்வாய்க்கிழமை கீரிமலையில் அந்தியேட்டியும், 5 - 7 - 89 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் வீட்டுக் கிருத்தியமும் நடைபெற உள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு தராமைக்கு வருந்துகின்றோம்,

உங்கள் பிரிவால் துயருறும்,
கணவர், மகள், உடன்பிறப்புகள்,
மச்சாள்மார், மருமக்கள், உறவினர்கள்.

140, (336) கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (11435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து லட்சம் தொன் அரிசி இந்த ஆண்டு இறக்குமதி

கொழும்பு, ஜூலை 4
இந்த ஆண்டில் 5 லட்சம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

மாரி போகச் செய்கையில் நெல் விளைச்சலில் 35 சதவீதம் குறைந்ததும் கடந்த ஆண்டு ஏற்பட்ட வரட்சியுமே அரிசி உற்பத்தி குறையக் காரணம் என்று அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சீனா, பாகிஸ்தான், தாய்லாந்து ஆய நாடுகளில் இருந்து 2 லட்சத்து 32 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமும் உணவுத் திணைக்களமும் ஏற்கனவே ஏற்பாடுகளைச் செய்து விட்டன.

மேலும் 70 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை ஆகஸ்ட்-நவம்பர் மாதங்களில் இறக்குமதி செய்ய கூ. மொ. வி. உலக நாடுகளிடமிருந்து விலைகள் கோரியுள்ளது.

5 லட்சம் மெட்ரிக் தொன் அரிசி இவ்வாண்டு இறக்குமதி செய்யப்படின், அதுவே 1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் இறக்குமதி செய்யப்படும் மிகப் பெரிய தொகையாக இருக்கும் என்று தெரிகிறது.

1977 இல் 5 லட்சத்து 46 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.
(இ-எ)

## பரு.-ஆழியவளை பஸ்சேவை

பருத்தித்துறை ஜூலை 4
பருத்தித்துறை ஆழியவளை வடபிராந்திய பஸ் போக்குவரத்துச் சேவை கடந்த புதன் கிழமை முதல் நிறுத்தப்பட்டதாகத் தெரியவருகின்றது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள இந்திய அமைதி காக்கும்படையின் காவல் அரணைத் தாண்ட எவ்வித வாகனங்களும் அனுமதிக்கப்படாததால் பருத்தித்துறை ஆழியவளை வடபிராந்திய பஸ் சேவை நடத்தப்படவில்லை.

பருத்தித்துறை ஆழியவளை வீதி மிக மோசமாக குன்றும் குழியுமாகவுள்ளதால் பருத்தித்துறை பஸ் சாலை ஊழியர்கள் அப்பாதையினுடாக சேவையாற்ற மறுத்து வந்தனர்.

யாழ். மாவட்ட வீதி பராமரிக்கும் அதிகாரசபை இப் பாதையைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. சந்திரசேகரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்
[இ-118]

## வர்த்தகருக்கு அடையாளக் கார்ட்

சுன்னுகம், ஜூலை 4
சுன்னுகம் வர்த்தக ஊழியர் சங்கத்தினர் தமது அங்கத்தவர்களுக்கு விசேஷ அடையாளக் கார்ட்டுகளை வழங்குகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் தமது அங்கத்தவர்களை இலகுவாக அடையாளம் காண இது உதவும் என்று வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் தெரிவிக்கிருர். [இ- 27]

## பொருள்கள் சேதம்

பருத்தித்துறை ஜூலை 4
பருத்தித்துறையில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற வன்செயல்களை அடுத்து யாழ்ப்பாணம் மக்கள் வங்கியில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் சுமார் 50ஆயிரம்ரூபா பெறுமதிமிக்க பொருள்கள் சேதப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது [ -118]

## அமைதிப்படை விலகல்:
## திகதியை நிர்ணயிக்க இருசாராரும் இணக்கம்?

புதுடில்லி, ஜூலை 4
பேச்சுக்கள் நடத்திய பின்னர் அமைதிப்படைத் துருப்புக்களை விலக்கிக் கொள்வதற்கான திகதியை நிர்ணயிப்பது பற்றிய புரிந்துணர்வு புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு சிரேஷ்ட அரசாங்க வட்டாரம் கூறியதாக ஏஜன்சி செய்தி தெரிவித்தது.

ஜூலை 29 ஆம் திகதிக்கு முன்னர் அமைதிப்படையை திருப்பி அனுப்புவது பற்றி ஜனாதிபதி பிரேமதாஸா இனி மேல் பேசாமல் இருக்கலாம் என்று நம்புவதற்கு எம்மிடம் காரணங்கள் உண்டு.

திருப்பி அழைக்கும் திகதியை இரண்டு அரசுகளும் தீர்மானிக்க வேண்டும் —

தேவைக்கு மேற்பட்ட ஒரு நாளாவது இலங்கையில் தனது துருப்புக்கள் இருப்பதை இந்தியா விரும்பவில்லை —

ஒரு படுகொலைக்கு இடம் விடாமல் அமைதிப்படை திருப்புவதையே நாம் விரும்புகிறோம்—

அமைதி நிலவக் கூடிய ஒரு கட்டமைப்பை உருவாக்கி விட்டே நாம் திரும்ப விரும்புகிறோம்—

இவ்வாறு அந்த அரசாங்க வட்டாரம் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது. (அ.எ)

## இங்கும் லீவுகள் ரத்து

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் லீவுகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

தென் இலங்கையில் இடம்பெறும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிக்க சகலரதும் லீவுகள் ரத்துச் செய்துள்ளதாக அரசு அறிவித்திருந்தது தெரிந்ததே.

இதேவகையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் லீவுகளும் ரத்ச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
(ஒ-10-8)

## ஊர்காவலரின் ஆயுதங்கள் பொலீஸாரிடம்

கொழும்பு, ஜூலை 4
பதுளையில் உள்ள தோட்டம் ஒன்றில் பணிபுரிந்து வந்த ஊர்காவல் படையினர் ஐவர் தங்கள் ஆயுதங்களை பதுளை பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்தே இவர்கள் ஆயுதங்களைக் கையளித்ததாகத் தெரியவருகிறது.



யாழ் - லயன்ஸ் கழகத்தின் புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்பு வைபவம் சமீபத்தில் யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்டலில் நடைபெற்றது. புதிய தலைவரான வைத்திய கலாநிதி யோகநாதன் பேசுவதை படத்தில் காணலாம்.
(படம் - அகில்ராஜ்)

## வங்கி ஊழியர் கண்டனம்

கொழும்பு, ஜூலை 4
போக்குவரத்து ஊழியரின் வேலைநிறுத்தத்தைச் சமாளிக்க அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை அரசு பிரகடனம் செய்ததை இலங்கை வங்கி ஊழியர் சங்கம் பலமாகக் கண்டித்திருக்கிறது

சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
(ஒ-எ)

## இலங்கையின் ஹிந்தி ஒலிபரப்பு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஹிந்தி ஒலிபரப்பு சேவை நடத்தவுள்ளது. தென்கிழக்காசிய சேவையில் இது சேர்க்கப்படும்.

அதன் பொருட்டு ஹிந்தி அறிவிப்பாளர் பதவிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் விண்ணப் பங்களைக் கோரியுள்ளது. (அ-எ)

## வேலைநிறுத்தம் காரணமாக
## வேலைக்கு வராத ஊழியர் குறித்து இவ்வாரம் முடிவு

கொழும்பு, ஜூலை 4
போக்குவரத்து ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக வேலைக்குச் சமுகமளிக்கத் தவறிய அரச ஊழியர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி பொது நிர்வாக அமைச்சு இந்த வாரம் முடிவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டது.

இது பற்றி தொழிற் சங்கங்களிடம் இருந்தும் அமைச்சு அபிப்பிராயம் கேட்டுள்ளது.

ஊழியரின் நடைமுறைக் கஷ்டங்கள் பற்றி பரிசீலனை செய்த பின்னரே அமைச்சு ஒரு தீர்மானத்துக்கு வரமுடியும் என்று அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.
(ஒ-எ)

## சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, ஜூலை 4
மட்டக்களப்பு கோப்பாய் வெளியில் கே. சின்னத்துரை (24 வயது) என்பவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
(க- 21)

## முல்லைத்தீவில் ஹர்த்தால்

கொழும்பு, ஜூலை 4
சனிக்கிழமை வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதை அடுத்து மருதமடு மாதாவின் ஆடி உற்சவம் இம்முறை அமைதியான முறையில் சொற்ப பக்தர்களுடன் நிறைவெய்தியது.
(அ-9)

# கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு கல்வி அதிகாரிகள் விஜயம்

கிளிநொச்சி கல்வித் திணைக்கள அதிகாரிகள் குழு பாடசாலைகளுக்கு திடீர் விஜயங்களை மேற் காண்டு வருகின்றது.

பாடசாலைக்கு செல்லும் இக்குழு மதிய உணவு ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகள், பாடசாலைகணக்குகள், நிர்வாக நடவடிக்கைகள், ஆகியவற்றை பரிசீலனை செய்கின்றது.

அதேவேளை பாடசாலைகளின் தேவைகளையும் அறிந்து வருகின்றது.

தற்போது சகல பாடசாலை அதிபர்களும் இந்த குழுவின் திடீர் விஜயத்தை எதிர் பார்ப்பதினுல் பாடசாலைகளின் செயற்பாடுகள் திறமையாக இயங்கத் தொடங்கியுள்ளன.

இந்தக் குழுவில் பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. கந்தசாமியும், கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் தனஞ்செயன் வேலாயுவம், தர்மரத்தினம் கணக்காளர் ஜெயப்பிரகாஷ் ஆகியோரும் இடம்பெறுகின்ருர்கள்.
(க - 76)

# சர்வோதய சேவை புனிதமானது
## தையல் பயிற்சி ஆரம்ப வைபவத்தில் உரை

சரவெட்டி, ஜூலை 4
சர்வோதய பிரதேச நிலையத்தின் புனிதத்தை பார்க்கும்போது அவர்களது புனிதமான சேவையை அவதானிக்க முடிகிறது. தையல் பயிற்சி பெறும் மாணவிகள் ஒழுக்கமுடையவர்களாகவும் சிறந்த பண்புடையவர்களாகவும் திகழ்ந்து சர்வோதய நிறுவனத்திற்கு பெருமை தேடிக் கொடுக்க வேண்டும்;

சர்வோதய இலவச தையல் பயிற்சி வகுப்பு அங்குரார்ப்பண வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய இளைப்பாறிய விவசாயப் பணிப்பாளரும், தற்போதைய புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவருமான திரு. பொ. மாணிக்கவாசகர் இப்படிக் கூறினுர்.

வடமராட்சி சர்வோதய பொறுப்பாளர் திரு. ப. தில்லைநாதன் வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

வடமராட்சி சர்வோதய பிரதேச நிலையத்தில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி. சுப்பிரமணியம் உரையாற்றுகையில் 'தையல் பயிற்சி மாணவர்கள் காலத்திற்கேற்றவாறு நாகரிகமான முறையில் தையல் கலையைக் கற்றுத் தங்கள் காலிலேயே வாழக்கூடிய நிலையை அடைய வேண்டும்.

எமது கல்லூரிக்கு ஏற்பட்ட நீர்ப்பிரச்சினையை தீர்ப்பதற்கு சர்வோதயத்தின் முயற்சியால் குழாய்க்கிணறு தோண்டப்பட்டது: இதற்காகச் சர்வோதயத்திற்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்ருேம் எனக் கூறினுர்.

வடமராட்சி தெற்கு, மேற்கு சனசமூக நிலயங்களின் சமாசத்தலைவரும் சமாதான நீதிவானுமாகிய திரு. நா. கணேசசிங்கராசா, திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். (ச-70)

# மாவைக்கந்தன் உற்சவத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு
## உ. அ. அதிபர் தலைமையில் நடந்த மாநாட்டில் அதற்கான தீர்மானங்கள்

காங்கேசன்துறை, ஜூலை 4
சரித்திரப்பிரசித்தி வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை அமைதியான முறையில் நடத்துவதெனவும். அதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது,

மேற்படி கோவில் உற்சவம் தொடர்பாக ஆராய்வதற்கென வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கூட்டம் ஒன்று நடைபெற்றது.

உதவி அரச அதிபர் திரு. வ. இராசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தை கிராம சேவையாளர் ஒருவர் தேவாரபாராயணம்இசைத்து பக்திசிரத்தையுடன் ஆரம்பித்துவைத்தார்.

மாவை ஆலய ஆதீனகர்த்தா, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா உட்பட அரசஅதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பொதுநல சேவாசங்கங்களின் பிரதிநிதிகள். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சாரணர் இயக்க பிரதிநிதிகள், சீமெந்து கூட்டுத்தாபன - லங்கா சிமெந்து நிறுவன அதிகாரிகள் உட்பட பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இன்றுள்ள சூழ்நிலையில் உற்சவத்தை நடத்திமுடிக்க முடியுமா? என்ற வகையில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு இறுதியில், எப்படி இருப்பினும் முருகப்பெருமானின் உற்சவத்தைத்தடையின்றி நடத்தி முடிக்கவேண்டுமென கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

உற்சவ ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு;—

★ உற்சவத்தை இடைஞ்சல் ஏதுமின்றி அமைதியாகவும், ஒழுங்காகவும் நடத்துவதற்கு சகலரதும் ஒத்துழைப்பைக் கோருதல்.

★ ஆலயத்துக்கு வரும் அடியார்களை ஆடம்பர ஆடை, ஆபரணங்களை விடுத்து உற்சவங்களில் பங்குகொள்ளுமாறு கோருதல்.

★ உற்சவகாலத்தில் ஆலய சுற்றுடல் அமைதிப் பிரதேசமாக விளங்கவேண்டும்.

★ ஆலய வீதிகளில் வியாபார நிலையங்களை அமைக்க விரும்புவோர் ஆதீனகர்த்தா, கிராமசேவையாளர், சுகாதார அதிகாரி ஆகியோரின் சிபார்சுடன் உதவி அரச அதிபரிடம் அனுமதி பெற்றே வியாபார நிலையங்களை அமைக்கவேண்டும்.

★ பக்தர்களின்பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் ஒழுங்குகளை தொண்டர்களும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர் இயக்கத்தினரும் கவனித்தல்.

★ சுகாதார ஏற்பாடுகளை சுகாதார அதிகாரிகள் கவனித்தல்.

★ வலி. வடக்கு பிரதேச சபை உற்சவத்திற்கான ஒழுங்குகளை மேற்பார்வை செய்தல். (இ-68)

நம்பிக்கை
நாணயத்தின்
சின்னம் ——→ ஷப்ரா




நிதித்துறையில்
உங்கள் நண்பன்

விக்னு
டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
[Regd. No-12414]

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

பிரிவு 5
O/L DAY CLASSES
(8.30 — 1.30)
EVENING CLASSES
(3.00 — 5.00)
★ புதிய பழைய பாடத்திட்டம் ★

5-7-89இல் ஆரம்பமாக இருந்த வகுப்புகளின் ஆரம்ப திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

முக்கிய குறிப்பு:-
O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினுல் போதிக்கப்படுகின்றது.
- கடமை கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்;
- மாணவர்கள் முன்கூட்டியே பதிவு செய்யப்படல் வேண்டும்.

[சி-2979]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு

# சென். மைக்கல்ஸ் வெற்றி

கொழும்பு, ஜூலை 4

22 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான அகில இலங்கைக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் பொலீஸ் அணியை 96:76 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தோற்கடித்ததன் மூலம் மட்டக்களப்பு சென் மைக்கல்ஸ் அணி நான்காவது முறையாக சாம்பியன் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

கடந்தவாரம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் சென். மைக்கல்ஸ் அணியை எதிர்த்துப் போட்டியிட்ட 7

## விளையாட்டு அரங்கு

கழகங்களும் தோல்வியைத் தழுவிக்கொண்டன.

பொலீஸ் அணியின் சார்பாக ஆடிய வீரர்களுள் மூவர் முன்பு சென். மைக்கல்ஸ் அணிக்காக ஆடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இடைவேளையின் போது 52:48 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னணியில் திகழ்ந்த சென். மைக்கல்ஸ் அணி இடைவேளையின் பின் வெகு சிறப்பாக ஆடி வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் மைக்கல்ஸ் அணிக்கு 31 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்த ஜேம்ஸ் நமசிவாயம் இப்போட்டித் தொடரின் சிறந்த வீரருக்கான பரிசையும் அதிக புள்ளிகளைப் பெற்றதுக்கான பரிசையும் பெற்றுக்கொண்டார்.

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட வரலாற்றில் மிகவும் பிரசித்திபெற்ற அணியாக மட்டக்களப்பு சென். மைக்கல்ஸ் அணி விளங்குகின்றது (இ-6)

## மோட்டார் ஓட்டப் பந்தயம்

கொழும்பு, ஜூலை 4

இலங்கையின் பிரபல்யம் வாய்ந்த மோட்டார் ஓட்டப் போட்டி ம்மாத இறுதியில் கட்டுநாயக்காவிலுள்ள கட்டுக்குருந்த என்னுமிடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை மோட்டார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் இப்போட்டிக்கு இதுவரைகாலமும் நடைபெற்ற போட்டிகளுக்கு விண்ணப்பித்ராத அதிகூடிய எண்ணிக்கையினரான 268 மோட்டார் வீரர்கள் விண்ணப்பித்துள்ளனர். (இ-6)

## துப்பாக்கி சுடும் போட்டி

கொழும்பு ஜூலை 4

ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் இலங்கையில் நடைபெறவுள்ள துப்பாக்கி சுடும் போட்டிக்கு சார்க் அங்கத்தவநாடுளுக்கும் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் துப்பாக்கி சுடும் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள இப்போட்டிகள் அனைத்தும் கட்டுநாயக்காவில் அமைந்துள்ள விமானப்படையின் துப்பாக்கி சுடும் தளத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் திறமை காட்டும் இலங்கை வீரர்களிலிருந்து ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான குழு தெரிவுசெய்யப்படவுள்ளது. [இ-6)

## நீர் குறை நீங்கியது

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி மருத்துவமனைக்கு தண்ணீர் பவுசர் தற்போது கிடைத்துள்ளதை அடுத்து நீண்டகாலம் இங்கு நிலவிய தண்ணீர்ப் பற்றுக் குறை நீங்கியது. (க-76)

## இலக்கிய வட்டத் தலைவர்

ஊர்காவற்றுறை, ஜூலை 4

ஊர்காவற்றுறை இலக்கிய வட்டத்தின் தலைவராக திரு. ஆ. சபாரத்தினம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். (க- 16)

# 5,000 பேருக்குப் பதிலாக 1,500 பேரே திரட்டப்படுவர்

## நிதி நெருக்கடி காரணமாம்

கொழும்பு, ஜூலை 4

5 ஆயிரம் பேருக்குப் பதில் ஆயிரத்து ஐந்நூறு பேரே புதிதாக இலங்கை இராணுவத்துக்கு திரட்டப்படுவர் என்று சிரேஷ்ட பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதி நெருக்கடி காரணமாகவே திரட்டப்படுவோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படையினர் திரும்பிய பின்னர், திரட்டப்பட இருக்கும் இவர்கள் கிழக்கு மாகாணத்தில் அமைதியை நிலைநாட்டுவதில் ஈடுபடுத்தப்படுவர்.

வட மாகாணத்துக்கு எவ்வளவு இலங்கைப் படையினர் தேவைப்படுவர் என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் எப்படியும் 5 படை அணிகள் தேவைப்படும் என்றும் சிரேஷ்டப் பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது. (ஒ-எ)

# ஆலயங்களை மையமாக வைத்து பக்திச் சூழலை வளர்க்க வேண்டும்

## ஆலய உற்சவத்தில் உரை

காங்கேசன்துறை ஜூலை 4

'ஆலயங்களில் உற்சவங்களை மட்டும் நடத்துவதால் பயன் ஏற்படாது. ஆலயங்களை மையமாக வைத்து அச்சுற்றுடலில் பக்திச்சூழலை வளர்க்க வேண்டும். இறைவழிபாடு தான் எமக்கு மன அமைதியைத் தரும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

காங்கேசன்துறை குருநாத சாமி ஆலய முதலாம் நாள் உற்சவத்தில் கலந்து சிறப்புரை ஆற்றிய ஆசிரியை திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது சமயத்தைப் பொறுத்தவரை ஆலயங்களுக்குக் குறைவில்லை. எங்கு பார்த்தாலும் ஆலயங்கள் இருக்கின்றன. ஆனால் ஆலயங்கள் மூலம் சமய உணர்வு, சமய நெறி வளர வழிவகைகள் மேற்கொள்ளப்படுவது குறைவாகவே உள்ளது.

திருவிழாக்களை நடத்துவதுடன் நின்றுவிடாது கிராம மக்களை சமய நெறியில் நல்வழிப்படுத்தி நல்வாழ்வு வாழ வைக்க ஆலயங்கள் உதவ வேண்டும்.

சமய சொற்பொழிவுகள், பஜனைகள் அடிக்கடி நடைபெறவேண்டும்.

இப்படி அவர் கூறினார். (ச-68)

## பஸ் விபத்தில் 40 பேர் பலி!

பஸ்விபத்து ஒன்றில் 40 பயணிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

நெடுந்தீவுக்கான

# புதிய படகுகளை விரைவில் சேவைக்குவிட உறுதி

நெடுந்தீவு ஜூலை 4

நெடுந்தீவு கடற் போக்குவரத்துக்கென புதிதாகக் கட்டப்பட்டுவரும் படகுகளை விரைவில் சேவைக்கு அனுப்பி வைக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தான் உடனடியாக மேற்கொள்வதாக போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இச்சேவையில் ஈடுபடுத்தும் பொருட்டு இரண்டு புதிய படகுகள் கட்டப்பட்டு வருகின்றன.

அவற்றை விரைவில் சேவைக்கு அனுப்பி வைக்க உதவுமாறு அமைச்சர் திரு. செல்லச்சாமியிடம் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் கேட்டிருந்தது. (ச-111)

## மக்கள் முகம்

### ஒதியமலை பா. அ. சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஒதியமலை அ. த. க. பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலவை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. என். பரமானந்தம், அதிபர் இணைச் செயலாளர்கள் செல்வி ரி. சசிகலா, திரு. க. பேரம்பலம், பொருளாளர்:- திரு. எஸ். சிவராசா, நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு. ச. சாம்பசிவம், திருமதி ச. பொன்னம்மா, திரு. கி. மகாலிங்கம், திரு. பொ. வேதநாயகம், திருமதி சி. செல்வராணி, கணக்காய்வாளராக திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா, திரு. ச. மோகநாதன், திருமதி லோகேஸ்வரி. (க)

### இயக்குனர்சபை

வேலணை, ஜூலை 4

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. இ. பீற்றர், திரு பொ. மாசிலாமணி, திரு. செ. சண்முகவடிவு, திரு. இ. மகேந்திரன், திரு பொ. சந்திரசேகரம்பிள்ளை, திரு. புண்ணியமூர்த்தி, திரு. பொ. நடராஜா. (க 167

### இயல் - இசை நாடகப் போட்டி

ஊர்காவற்றுறை, ஜூலை 4

வேலணை, ஊர்காவற்றுறை கொத்தணிக்குள் அடங்கும் பாடசாலைகளுக்கிடையிலான இயல், இசை, நாடகப் போட்டிகள் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளன.

### இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி ஜூலை 4

சாவகச்சேரி ஈவட்ட வைத்தியசாலையில் பதிவு பெற்ற வைத்தியராகக் கடமையாற்றிய டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்கைதடி மத்திய மருந்தகத்துக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கைதடி மத்திய மருந்தகத்தில் கடமையாற்றிய வைத்தியர் இளைப்பாறியதை அடுத்தே இந்த இடமாற்றம் செய்யப்பட்டது. (இ-117)

# பாடசாலையின் தேவையை நிரப்ப பழைய மாணவர் உதவவேண்டும்

## அபிவிருத்திச் சங்க கூட்டத்தில் உரை

பண்டத்தரிப்பு, ஜூலை 4

"அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் கோட்டக்கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை எதிர்பார்த்தபடி இயங்க நிதி ஒதுக்கீடு இன்னும் செய்யப்படவில்லை. ஆகவே பாடசாலைகளின் தேவைகளுக்கு அரசாங்கத்தை எதிர் பார்க்காமல் பெற்றோர்— பழைய மாணவர்கள் முன்னின்று உழைக்க வேண்டும்"

மாதகல் நுணசை வித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போது வித்தியாலய அதிபர் திரு. வே. சேனாதிராசா மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் திரு. க. கா. சிவபாதம் உரையாற்றுகையில்; சமாதான நீதிவான் திரு. அ. கந்தசாமி தமது தந்தை, சகோதரர்களின் நினைவாக பாடசாலை மாணவர் தேவைக்குத் தண்ணீர் வசதி செய்து தந்ததுக்கும்—

ஓய்வுபெற்ற அதிபர் திரு. செல்லையா பாடசாலை புலமைப் பரிசில் நிதி ஒன்றை ஏற்பாடு செய்ததுக்கும் நன்றி தெரிவித்தார். (ச-120)

## தெரு வெளிச்ச இணைப்பு

ஊர்காவற்றுறை, ஜூலை 4

ஊர்காவற்றுறை பட்டணத்தின் எல்லைக்குள் புதிதாக தெருவெளிச்ச இணைப்புக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் விசேஷ ஆணையாளர் திரு. எஸ். எஸ். சிவரத்தினம் எடுத்துக்கொண்ட முயற்சியால் இருபத்தையாயிரம் ரூபா செலவில் புதிய 'ரீயூப்' வெளிச்ச இணைப்புக்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (இ- 16)

அமைதிப்படை வெளியேற்றம்

# உடன்பாடு காண இருந்த வேளையில் ஜனாதிபதி அறிவிப்பு வந்ததாம்

புதுடில்லி, ஜூலை 3

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 2ஆவது ஆண்டு நிறைவை (ஜூலை 29) ஒட்டி கணிசமான அளவு அமைதிப் படையினரைத் திருப்பி எடுப்பது பற்றி இந்தியாவும் இலங்கையும் ஓர் உடன்பாட்டைச் செய்து கொள்ள இருந்தன.

இந்த உத்தேச உடன்பாட்டின்படி எஞ்சிய அமைதிப் படையினரை ஆண்டு இறுதிக்குள் இந்தியா திருப்பி எடுக்கச் சம்மதம் தெரிவித்து இருந்தது.

இப்படி இருதரப்பினரும் பேசி உடன்பாடு எட்ட இருந்த சமயத்தில்தான் ஜனாதிபதி பிரேமதாச ஒருதலைப் பட்சமாக அமைதிப்படையை ஜூலை 29க்கு முன்னர் திருப்பி அழைக்க வேண்டும் என்று கோரிக்கையை விட்டார்.

அத்தோடு அமைதிப் படையைத் திருப்பி அழைக்கும் பேச்சுக்கள் திடீரென்று அறுந்தன.

இவ்வாறு புதுடில்லியில் ராஜதந்திரிகள் தெரிவித்தனர் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அமைதிப்படை விவகாரம் குறித்தும் கொழும்புப் பேச்சுக்கள் குறித்தும் இலங்கை ஜனாதிபதி விடுக்கும் அறிக்கைகள் ஒவ்வொன்றும் புதுடில்லிக்கு ஆச்சரியத்தையும் கோபத்தையுமே அளிக்கின்றன.

இந்திய அரசுக்கு முன்கூட்டியே தெரிவிக்காமல்தான் இவற்றை இலங்கை அறிவித்து வருவதாகப் புதுடில்லி அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். (இ·எ)

# இயற்கைவளங்களைபுறக்கணித்து இறக்குமதிப் பொருள்களில் மோகம்

## "கற்பகம்" திறப்புவிழாவில் உரை

பண்டத்தரிப்பு, ஜூலை 04

"இலவசமாகக் கிடைக்கக் கூடியதும் ஆரோக்கிய வாழ்வுக்குச் சிறந்தவைகளுமான இயற்கை வளங்களை நாம் மறந்து புறக்கணித்து இறக்குமதிப் பொருள்களில் மோகம் கொள்கின்றோம். இம்மோகத்தினால் எமது செல்வம் சுகவாழ்வு, ஆரோக்கியம், ஆயுள் என்பனவற்றைக் குறைத்துக்கொள்கின்றோம்."

மானிப்பாயில் 12 ஆவது "கற்பகம்" விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் "ஆத்மஜோதி நா. முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

பனை அபிவிருத்திச் சந்தைப்படுத்தல் அலுவலர் திரு. வி. திவ்வியராசன் இத்திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா மங்கள விளக்கேற்றி வைத்தார்.

திரு. நா. முத்தையா தமது உரையில் மேலும் கூறியதாவது "ஒடியல் கூழை எமது மக்கள் விரும்பிக் குடித்தனர். அது இன்றைய சூப்பு வகைகளை விடச் சிறந்தது. அன்று இதை "தாலமூல தைலம்" என மக்கள் கூறி விரும்பிக் குடித்தனர். அவர்களைச் சலரோகம் போன்ற நோய்கள் அணுகவில்லை. அவர்கள் நீண்ட ஆயுள் பெற்று வாழ்ந்தனர்.

இந்தியாவில் நடனக் கல்லூரி ஒன்றுக்குச் சென்றிருந்த போது நடன மாதருக்கு அலங்காரம் செய்ய வைத்திருந்த பனை ஓலை ஆபரணங்களைக் கண்டு அதிர்ந்து விட்டேன்.

எமது விவேகமும் கைவினைத்திறனும் இணைந்து பனம் பொருள்களை ஆக்குவதிலும் பயன் படுத்துவதிலும் ஆர்வம் கொண்டால் எமது வாழ்வு காட்டாயம் உயர்வடையும்.

இப்படி அவர் கூறினார். (ச-120)

காரைநகரில்

# மணிவாசகர் குருபூசையும் திருத்தல பாதயாத்திரையும்

யாழ்ப்பாணம், ஜூலை 4

காரைநகர் மணிவாசகர் சபையினரால் நடத்தப்படும் மணிவாசகர் குருபூசையும் திருத்தலப் பாதயாத்திரையும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகப் பெருமானுக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகின்றன.

காலை 10 மணி தொடக்கம் காரைநகர்க் கல்லூரிகளின் மணிவாசகர்பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளை ஆத்மஜோதி நா. முத்தையா நிகழ்த்துவார்.

மாலை 3 மணிக்கு மணிமண்டபத்தில் அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் மணிவாசகர் குருபூசை ஆரம்பமாகும்.

திருத்தலப் பாதயாத்திரை 8 ஆம் திகதி சனிக்கிழமைகாலை 6-30 மணிக்கு துறைமுகம் மாணிக்கைசித்திரக்கூடச் சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் ஆரம்பமாகும்.

காரைநகரிலுள்ள 20 ஆலயங்களைத் தரிசித்து மாலை5-30 மணிக்கு ஈழத்துச் சிதம்பரத்தை இவர்கள் வந்தடைவார்கள்.

ஞாயிற்றுக்கிழமை காலை நடேசர் அபிஷேகமும் ஆனி உத்தர தரிசனமும் இடம் பெறும். (ச)

# முதியோர் கல்விவளர்ச்சிக்கு சனசமூக நிலையம் உதவ வேண்டும்

ஊர்காவற்றுறை ஜூலை 4

'இளம்பிராயத்தில் கல்வி அறிவைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்களும், வசதிகளும் கிடையாமல் தற்போது எந்த விடயங்களுக்கும் பிறர் உதவியை நாடிச் செல்லுகின்ற முதியோர் சிறிது கல்வி அறிவைப் பெறுவார்களேயானால் தமது சொந்தக்காலிலேயே நின்று தமது இறுதிக் காலம் வரை சமாளிக்க முடியும். எனவே முதியோர் கல்விக்கு வேண்டிய ஏற்பாடுகளை எமது பகுதியிலே இருக்கின்ற சனசமூக நிலையங்கள் செய்ய வேண்டும்.'

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரும் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் விசேட ஆணையாளருமான திரு. எஸ். எஸ். சிவரத்தினம் இங்கு நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். (க-16)


## தொட்டிலிடு வைபவம்

வல்வெட்டி திருப்புகழ் சுப்பிரமணியம் சுவாமிகளின் கனிஷ்ட புத்திரன் திரு. வைத்தியநாதன் திருமதி பார்வதிப்பிள்ளை (மல்லிகா, மல்லிபக்கண்டு) வைத்தியநாதன் தம்பதிகளின் ஏகபுதல்வன் வடிவேலழகனின் சிரேஷ்ட புத்திரி செல்வி ஜீகாவின் தொட்டிலிடு வைபவம் 05 - 07 - 89 புதன்கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள். அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


தனிப்பட்ட அழைப்பு விட இயலாமைக்கு வருந்துகின்றோம்.

திரு. சு. வைத்தியநாதன் தம்பதிகள்
திரு. வை. வடிவேலழகன் தம்பதிகள்

தெணியம்பை,
வல்வெட்டித்துறை. [11434]



## சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் 'அர்ச்சுனு' — மே-ஜூன் இதழ்




மாத இதழ் ரூபா 4.00 ஆண்டுச் சந்தா ரூபா 55.00

காசோலை அல்லது காசுக்கட்டளை "நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்று எழுதப்பட்டு "அர்ச்சுனு" த. பெ. எண். 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(2888)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறிவிடும்.

பொருள்:
பெருமைப்பண்பு பிறருடைய குறைபாட்டை மறைக்கும்; சிறுமையோ பிறருடைய குற்றத்தையே எடுத்துச் சொல்லி விடும்.

உதயன்
இல: 393/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805 / 22071
யாழ்ப்பாணம்: த. பெ. இல: 13
04 - 07 - 1989

# திருந்துவது எப்போது?

சட்டவிரோத மின் பாவனையால் பண்டத்தரிப்பு பட்டின பிரதேச உப அலுவலகத்துக்கு இருபத்தொரு லட்சம் ரூபா துண்டு விழுந்திருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

மக்களது வரிப்பணத்தில் இருந்து, அந்தப் பகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டே அந்த நஷ்டத்தைச் சரி செய்ய வேண்டி உள்ளது. அவ்வாறு செய்யாவிடில் அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதை மின்சார சபை நிறுத்திவிடும். சட்டரீதியாக மின்சாரம் பெற்று அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தியவர்களுக்கும் மின்சார விநியோகம் நின்று போகும். குற்றம் செய்யாமலே அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டதாகி விடும்.

பண்டத்தரிப்புப் பிரதேச சபையைப் போன்ற, குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் பெரும்பாலானவற்றுக்கு மின்சார விநியோகம் பெரும் பிரச்சினையாகி விட்டது. சட்டவிரோத மின்சாரப் பாவனை, பாவித்த மின்சாரத்துக்குரிய கட்டணத்தை வசூலிக்க முடியாமை, மின்சாரப் பாவனையைக் குறைத்துக் காட்டுதல் ஆகியவை உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களாகும்.

இந்த மூன்றிலும் சட்டவிரோத மின்பாவனையே மிகப்பெரிய தலையிடியாக இருப்பதைக் காணமுடிகிறது. அதனால் ஏற்படும் விளைவுகள், பாதிப்புகள் மிகவும் தாக்கமானவை.

உள்ளூராட்சி நிறுவனங்கள், மின்சார சபையிடம் மின்சாரத்தை மொத்தமாக வாங்கி, அதனை வரியிறுப்பாளர்களுக்கு விநியோகிக்கின்றன. எந்தக் கட்டத்திலும், எந்த நிலையிலும் மொத்தமாகப் பெறும் மின்சாரத்துக்கு உரிய பணத்தை உள்ளூராட்சி நிறுவனங்கள் மின்சார சபைக்குச் செலுத்திய ஆக வேண்டும். அதில், நிலுவை ஒரு வரம்பைத் தாண்டினால் மின்சார சபை தனது விநியோகத்தை நிறுத்திவிடும்.

இத்தகைய பின்னணியில், உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது பகுதி மக்களுக்கு மின்சார வசதிச் சேவையை வழங்குவதற்கு மின்சார சபையின் தயவிலேயே முழுக்க முழுகத் தங்கி இருக்க வேண்டி உள்ளது.

இதனைத் தெரிந்தும் தெரியாதவர்களாக, உணர்ந்தும் உணராதவர்களாகப் பாவனையாளர்கள் பொறுப்பின்றி நடந்து கொள்கிறார்கள். பலர் திருட்டுத் தனமாக — சட்டவிரோதமாக — மின்சாரத்தை சட்டணம் செலுத்தாமல் பாவிக்கிறார்கள். சிலர் பாவித்த மின்சாரத்துக்கு பணத்தைக் கட்டாமல் நிலுவை வைக்கிறார்கள்.

மின்சாரத் திருட்டு இப்போது சர்வசாதாரணமாகி விட்டது. மின்சாரம் உரிய முறையில் சரியான விதத்தில் கையாளப்படவில்லையேல் சில வினாடிகளிலேயே உயிர் கொல்லியாக மாறக் கூடியது. அந்த ஆபத்தைக் கூடக் கருதாமல் சிறியவர், பெரியவர் என்ற வயது வித்தியாசமின்றி இப்போது எல்லோரும் மின்சாரத் திருட்டில் ஈடுபடுகிறார்கள். அது தமக்கும் சமூகத்துக்கும் செய்யப்படும் பெரும் துரோகம் என்பதைப் புரிந்து கொள்வதில்லை.

பதிவு செய்யப்பட்ட, சட்ட ரீதியான பாவனையாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் வைத்துத்தான் மின்சாரம் வழங்கப்பட வேண்டும். மின்சார சக்தியின் அளவு கூடினால் அது உபகரணங்களை நாசமாக்கும்; குறைந்துவிட்டாலோ வெளிச்சம் குறைவது போன்ற பல பாதிப்புக்களை உண்டாக்கும். இதனால் மின்சாரத்தின் உரிய பயன்களைப் பெறமுடியாது. மின்சாரம் திருடப்படும் போது பணம் செலுத்திப் பாவிப்போருக்கே அந்தப் பாதிப்பு ஏற்படுகிறது.

சுயநலம் கருதி, தமக்குள்ள உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் மின்சாரம் திருடி, மற்றவர்களுக்கும் பாதிப்பை உண்டாக்கி, அபிவிருத்திக்குக் குந்தகம் விளைவிப்போர் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இதில் எவ்வித கருத்து வேறுபாடும் இருக்க வாய்ப்பில்லை.

ஆனால் மின்சாரத் திருட்டு என்பது மீண்டும் சுயநலம் என்ற வட்டத்திற்குள் வந்து ஒடுங்குவதைக் காணலாம். பொதுநலம், மற்றவர்கள் நலன், எப்படி ஆனால் என்ன, எனது தேவையை நிறைவேற்றி விடுவோம் என்ற சுயநலனைப் பிரதிபலிப்பவற்றில் மின்சாரத் திருட்டும் ஒன்று.

எந்தக் கடும் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், எமது பகுதி மக்கள் மனங்களில் பொது உணர்வு, பரந்த நோக்கு என்பன உதிக்கும்வரை பல சமூகப் பிரச்சினைகள் தொடரவே செய்யும். சுயநலம் தமிழர் சமூகத்தின் சாபக்கேடு. அதனை ஒவ்வொருவரும் நீக்கும் வரை தமிழ் இனம் அவலமும் அவஸ்தையும் நிறைந்த சுழியில் சிக்கிச் சுழலவே செய்யும்.

வேறு எவரையும் நொந்தும் பயனில்லை. தன்வினை தன்னைச் சுடும் ஒட்டப்பம் வீட்டைச் சுடும் என்பதில் உள்ள அர்த்தத்தை எமது மக்கள் எப்போது புரிந்து கொண்டு தம்மைத் தாமே திருத்திக் கொள்ளப் போகிறார்களோ?!

## சமய சந்நிதிகளில்

### சிறப்பாக நடந்தது

சாவகச்சேரி, ஜூலை 4

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மணவாளக்கோல 1018 சங்காபிஷேக விழா வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. (இ-31)

### வருடாந்த சங்காபிஷேகம்

மட்டுவில் தெற்கு அக்கினி வைரவர் கோயில் வருடாந்த மகா சங்காபிஷேகம் 28ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

நுணுவில் கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து அடியார்கள் காவடி பாற்செம்பு எடுத்து நேத்திக் கடன்களை நிறைவேற்றினர். (இ 31)

## தவறுவிடும் அதிகாரிகள் மீது கோர்பச்சேவ் சீற்றம்!

மாஸ்கோ, ஜூலை 3

சோவியத் யூனியன் உணவு நெருக்கடிக்குக் காரணமான உயர் அதிகாரிகளை கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தே வெளியேற்றப் போவதாக ஜனாதிபதி கோர்ப்பச்சேவ் எச்சரித்திருக்கிறார்.

நாட்டில் உணவுப் பொருள் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதற்குப் பிழையான உணவுக் கொள்கையே காரணம். இப்படி திரு கோர்ப்பச்சேவ் சொன்னார்.

சோவியத் உணவுப் பிரிவுக்கு திரு. லிகோவிச் தலைவராக இருக்கிறார். அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளில் திரு. கோர்ப்பச்சேவின் கொள்கைக்கு முரண்பட்டவராக இவர் விளங்குகின்றார். (எ)

## 4 வெளிநாட்டு விமானிகளை இந்திய அரசு விடுதலை செய்தது

புதுடில்லி, ஜூலை 2

இந்திய விமானப் பிராந்தியத்தினுள் அத்துமீறி அமெரிக்க விமானங்களை ஓட்டியதற்காகக் கைது செய்யப்பட்ட இரண்டு அமெரிக்கர்களையும் இரண்டு ஜேர்மனியர்களையும் புதுடில்லி அரசு விடுதலை செய்தது.

கடந்த 16 ஆம் திகதி இவர்கள் ஓட்டிய இரண்டு விமானங்களையும் இந்திய விமானப் படை குஜராத்தில் உள்ள புஜ் விமான நிலையத்தில் பலவந்தமாகத் தரை இறக்கியது. (எ)

## லெபனான் பிரச்சினை

ரியாத், ஜூலை 3

14 ஆண்டுகால லெபனான் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தீவிர முயற்சியில் சவுதி அரேபியா, அல்ஜீரியா, மொரக்கோ ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## இரத்த வர்த்தகம் டாக்டருக்கு சிறை

நியூயோர்க், ஜூலை 3

ஏழைகளிடமிருந்து ரத்தம் வாங்கி விற்பனை செய்த முன்னாள் டாக்டர் ஒருவருக்கு 10 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஒரு பைந்து ரத்தத்தை 10 டாலர் வீதம் ஏழைகளிடம் இருந்து வாங்கி 2 ஆயிரம் டாலருக்கு விற்றதாக சுரிந்தர் சிங் பன்ஸி மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

இது சம்பந்தமான வழக்கு அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. (எ)

## சோவியத் யோசனை நிராகரிப்பு

இஸ்லாமாபாத் ஜூலை 3

ஆப்கனில் இருதரப்பினருக்கும் ஆயுதங்கள் வழங்கப்படுவதைநிறுத்த புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டுமென்று சோவியத் விடுத்த யோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டது.

இந்த யோசனை ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று ஆப்கனிஸ்தானில் புதிதாகப் பதவி ஏற்ற அமெரிக்கத் தூதர் பீற்றர் டொம்ஸன் தெரிவித்தார். (எ)

## ஜெயலலிதாவுடன் அ.தி.மு.க தலைவர்கள் நேரடி தொடர்பு

சென்னை, ஜூலை 3

அ.தி.மு.க. வின் சிரேஷ்ட



தலைவர்கள், பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

இப்படி அ. தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் திரு. எஸ். இராகவானந்தம் தெரிவித்தார்.

செல்வி ஜெயலலிதாவுடன் அவரது உதவியாளர் நடராசன் மூலமாக சிரேஷ்ட தலைவர்கள் தொடர்பு கொண்டு வருவதாகக் கூறப்படுவது தவறு என்றும் அவர் சொன்னார்.

செல்வி ஜெயலலிதா நல்ல சுகமாக உள்ளார் என்றும் அவர் சொன்னார். (எ)

## ராஜீவின் மீது வழக்குத் தொடர ஜனாதிபதியிடம் மீண்டும் மனு

புதுடில்லி ஜூலை 3

போபர்ஸ் பேர ஊழல் விஷயமாக பிரதமர் ராஜீவ் காந்தி மீது வழக்குத் தொடர உத்தரவு இடும்படி இந்திய ஜனாதிபதி வெங்கடராமனிடம் மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜனதா அரசில்சட்ட அமைச்சராக இருந்த திரு சாந்தி பூஷண் இக் கோரிக்கையைச் சமர்ப்பித்து இருக்கின்றார்.

பேர ஊழல் தொடர்பாக பிரதமர் மீதுவழக்குத் தொடருவதற்குரிய சாட்சியங்கள் நிறைய இருப்பதாக திரு. சாந்திபூஷண் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

திரு. சாந்தி பூஷண் முன்னரும் இப்படி ஒரு கோரிக்கையை ஜனாதிபதியிடம் விடுத்தார். அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. (எ)

## கரன்சிங் நியமனம்

ஸ்ரீநகர், ஜூலை 3

இந்தியாவின் அமெரிக்கத் தூதராக டாக்டர் கரன்சிங் நியமிக்கப்பட்டார். இவர் முன்னர் மத்திய அமைச்சராக பணிபுரிந்து வந்தார். (எ)

## இந்திய 'அக்னி'க்குப் போட்டியாக பாகிஸ்தான் ஏவுகணை தயாரிக்கும்!

### இஸ்லாமபாத்தில் அறிவிப்பு

இஸ்லாமபாத், ஜூலை 3

இந்தியாவின் 'அக்னி' ஏவுகணைக்குப் போட்டியாக அது போன்ற ஏவுகணை ஒன்றைத் தயாரிக்க பாகிஸ்தான் முயற்சிக்கும் என்று அறிவிக்கப்பட்டது.



பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பாதுகாப்புத் துணை அமைச்சர் சர்வார் சீமா இதனை அறிவித்தார்.

இந்தியா கடந்த மாதம் வெற்றிகரமாக 'அக்னி' நடுத்தர ஏவுகணைப் பரிசோதனை செய்தது.

இது பாகிஸ்தானின் பாதுகாப்புக்குப் பயமுறுத்தலாக இருக்கிறது. இதனை பெனசிர் அரசு நன்கு உணர்ந்து உள்ளது.

பாகிஸ்தானின் பாதுகாப்பைப் பலப்படுத்த, 'அக்னி' போன்ற ஏவுகணை ஒன்றைத் தயாரிப்பதே மாற்று வழியாகும்.

70 கிமீ, 300 கிமீ தூரம் செல்லக்கூடிய ஹட்ப் -1, ஹட்ப் -2 ஏவுகணைகளை வெற்றிகரமாக பாகிஸ்தான் பரிசோதித்துள்ளது.

இப்படி துணை அமைச்சர் நாடாளுமன்றத்தில்சொன்னார். (எ)

## ஆண்-பெண் சமத்துவத்தை பேணும் தி.மு.க. ஆட்சி

### கலைஞர் விளக்கம்

திருக்கழுக்குன்றம், ஜூலை 3

திருக்கழுக்குன்றத்தில் நடந்த இரண்டு திருமண விழாக்களில் தமிழக, முதலமைச்சர் கருணாநிதி கலந்து கொண்டு பேசினார்.

அவர் சொன்னதாவது;

இத்தலம் கழுகுக்குத்தான் பிரசித்தி பெற்றது மட்டும் அல்ல கழகத்துக்கும் பிரசித்தி பெற்றது.

நாம் தவறாமல் ஆணும் பெண்ணும் சமம் என்று கூறி வருகிறோம்.

புராணங்களில் கூட சிவனும் சக்தியும் ஒன்று என்பதை நிரூபிக்க அர்த்த நாரீஸ்வரர் சிலையைக்காட்டுகிறார்கள்: பார்த்தீர்களா ஆண்பாதி பெண்பாதி என்று எடுத்துக் காட்டுகிறார்கள்.

ஆனால் ஆண்பாதி, பெண்பாதி என்று சொன்ன பக்தர்கள் இதுவரையிலே யாராவது சொத்திலே ஆணுக்குப் பாதி பெண்ணுக்குப் பாதி என்று சொன்னார்களா என்றால் இல்லை.

தி.மு க. அரசுதான் சொத்தில் ஆணுக்குப்பாதி பெண்ணுக்குபாதி என்று சட்டம் கொண்டு வந்தது.

இப்படி முதலமைச்சர்கருணாநிதி சொன்னார். (எ)

## நேபாள மாணவர் அமைப்பு இந்தியாவிற்கு வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 3

நேபாள அரசுடன் எதுவித உடன்பாடும் செய்துகொள்ள வேண்டாம் என்று புதுடில்லியில் உள்ள நேபாள மாணவர் சங்கம் இந்திய அரசைக் கேட்டுள்ளது.

அந்த நாட்டுடன் உடன்பாடு செய்து கொள்வது நேபாளத்தில் தற்சமயம் உள்ள சர்வாதிகார ஆட்சிக்கு அங்கீகாரம் அளிப்பதாக அமைந்துவிடும் என்று நேபாள முற்போக்கு மாணவர் யூனியன்ஸ் தெரிவித்துள்ளது.

சமாதான, சகவாழ்வு அடிப்படையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுடன் தான் உடன்பாடு காணவேண்டும் என்று மாணவர் அமைப்புக் கோரியுள்ளது.

தற்போது நேபாளத்தில் உள்ள அரசு மக்களுக்கு எதிரான, தேசத்துக்கு ஏதிரான ஒன்றாக விளங்கி வருகிறது. இது மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## சூடான் பிரதமர் உயிருடன் இருப்பதாக ராணுவம் தகவல்

கார்ட்டூம் ஜூலை 3

பட்டினியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளை தொடர்ந்து வழங்கும்படி ஐநாவுக்கு சூடான் இராணுவ அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வரட்சி காரணமாகவும் கிளர்ச்சி காரணமாகவும் சூடானில் கிராமப்புற மக்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

சிவில் அரசு பதவியில் இருந்த போது ஐநா நிவாரண உதவிகள் அவர்களுக்குக் கிடைத்து வந்தன.

இதனிடையில் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் மஹ்தி கைது செய்யப்பட்டுக் கொல்லப்படவில்லை என்று இராணுவ அரசு அறிவித்துள்ளது.

சிவில் அரசில் அங்கம் வகித்த 22 சிரேஷ்ட அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவ அரசு அறிவித்தது. (எ)

## வீரர் பலி

பொன், ஜூலை 3

கார்க் குண்டு வெடித்ததில் பிரிட்டிஷ் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

அவரது மனைவியும் நான்கு குழந்தைகளும் படுகாயமடைந்தனர்.

மேற்கு ஜேர்மன் நகரொன்றில் இச்சம்பவம் நடந்தது. (எ)

## தமிழ் மொழி ஆய்வுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட வேண்டும்

### தமிழக கல்வி அமைச்சர் அன்பழகன் பேச்சு

சென்னை, ஜூலை 3

தமிழ்மொழி ஆய்வுக்கு டாக்டர் பட்டம் வழங்கவேண்டும் என்று நூல் வெளியீட்டு விழாவில் கல்வி அமைச்சர் அன்பழகன் தெரிவித்தார்

புலவர் வெற்றியழகன் கவிதைகள் வெளியீட்டு விழாவும், கவியரசன் பொன்னிவளவனுக்கு பாராட்டு விழாவும் சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் சென்னை தமிழ்ச்சங்க சார்பில் நடத்தப்பட்டது.

விழாவில் அமைச்சர் அன்பழகன் பேசியதாவது:-

### கவிதை எது

கவிதை என்பது உருவாக்கப்படுவது அல்ல; கொட்டப்படுவது.

தமிழ் உணர்ச்சியுள்ள தமிழன் என்ற உணர்வு உள்ள பெருமக்கள் எழுதும் போது அந்தக் கவிதை நம்மைத் தொடுகிறது.

அந்த உணர்வு இல்லாதவர்கள் எழுதுவது நம்மைத் தொடாது.

வேறுசிலரை அந்தக்கவிதை தொடுகிறது.

துன்பம் வரும்போது யாழ் எடுத்துப் பாடுவது போல, தொல்லைகளுக்கு ஆட்பட்ட போதும் தமிழ் உணர்வை மறக்கக் கூடாது.

''கவிஞர்கள் அதி[illegible] னர். ஆனால் கவிதை நூலை விலைக்கு வாங்குவோ[illegible] வாக உள்ளனர். படிப்பவர் ஆர்வம் குறைந்துவிட்டது'' என்று இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டனர்.

ஒருவர் 4 மாதங்களில் 7 புத்தகங்களை வெளியிட்டால் அதில் 4 நூல்கள் ஏமாற்றம் தருவதாக உள்ளது. இதனால் கவிஞர்கள் ஓர் அரங்கில் பேசி நல்லகவிதைகள் தவிர, நாட்டு மக்கள் ஏமாறும் கவிதைகள் வெளிவராமல் இருக்க வழி செய்யவேண்டும்.

### தமிழுக்குக் கேடு

எத்தனையோ பேர் கவிதை நடை இல்லாமல் கவிதை ஆழம் இல்லாமல் எழுதி அச்சிட்டு வெளியிட்டுவிடுகிறார்கள். இதன் மூலம் தமிழுக்குச் செய்யும் கேட்டைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது.

எனவே முதலில் தாம் எழுதிய நூல் பற்றி நண்பர்களுடன் உரையாடி வெளியிடத் தகுந்ததா என்று பார்த்து அறியவேண்டும்.

### டாக்டர் பட்டம்

பல்கலைக் கழகங்கள் மூலம் டாக்டர் பட்டங்கள் ஏராளமாக வழங்கப்பட்டு வருகிறது. அதற்கு மாறான கருத்து என்னிடம் இல்லை. ஆனால் டாக்டர் பட்டம் பெற்றவர் என்ன ஆராய்ச்சிக்காகப் பெற்றார் என்பது தெரியவில்லை.

[illegible] பார்த்தால் அந்த நூலில் ஆய்வு [illegible] இருக்கிறது என்றே தோன்றும். அதை ஆய்வு செய்தே டாக்டர் பட்டம் வழங்கலாம்.

### வளர்ந்ததா, தேய்ந்ததா?

கடந்த 30 ஆண்டுகளாக தமிழ் வளர்ந்து இருக்கிறதா? தமிழ் வளம் தேய்ந்து இருக்கிறதா? என்று ஆய்வு நடத்தி டாக்டர் பட்டம் வழங்கலாம்.

ஆய்வுத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு நான் இந்த ஆலோசனையைத் தெரிவிக்கிறேன்.

ஆதரித்தும் ஆய்வு செய்யலாம், மறுத்தும் ஆய்வு செய்யலாம். ஆனால் தாங்கள் நடத்திய ஆய்வுதான் என்று உறுதி செய்ய வேண்டும் - இப்படி அமைச்சர் சொன்னார்.

## அமெரிக்க ராஜதந்திரி வெளியேற்றம்

பிராக், ஜூலை 3

அமெரிக்க ராஜதந்திரி ஒருவரை செக்கோஸ்லேவிய அரசு வெளியேற்றியது.

நாட்டில் உள்ள அரசு அதிருப்தியாளர்களுடன் அவருக்குத் தொடர்பு இருந்ததாகக் கூறி, வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (எ)

## ஹஜ் சிந்தனைகள்

(நபியே) இப்ராஹீமுக்கு கஃபாவின் புனித தலத்தை நாம் வணக்கஸ்தலமாக்கிக் கொடுத்து அவரை நோக்கி நீர் எவரையும் எனக்கு இணையாக்காதீர். எனது வீடாகிய (கஃபா) புனித தலத்தைச் சுற்றி வருவோருக்கும் அதில் நின்று, குனிந்து, சிரம்பணிந்து தொழுவோருக்கும் அதனைப் பரிசுத்தமாக்கிவையும். இதன் பின்னரே நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அன்றிலிருந்து (சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்) புனித கஃபாவைத் தரிசிப்பது வழக்கிலிருந்து வந்தது. பின்னர் நபி (ஸல்) அவர்களின் காலத்தில அது வசதி பெற்றோர்கள் மீது விதியாக்கப்பட்டது நம்மில் மக்கா சென்று ஹஜ் கடமையை நிறைவேற்ற வசதி பெற்றோர் இக்கடமையினை நிறைவேற்றப்பின் வாங்குவது ஏனோ?

● தெற்காசியாவில்

## கொத்தடிமைகளாக எழுபது லட்சம் சிறுவர்கள் சிறை

புதுடில்லி, ஜூலை 3

தென் ஆசிய நாடுகளில் 70 லட்சத்துக்கு அதிகமான குழந்தைகள் அடிமைகளாக வேலை செய்கின்றனர் என்று புதுடில்லியில் நடந்த சர்வதேச மாநாடு ஒன்றில் அறிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்டு, கொத்தடிமைகளாக மிருகங்களிலும் கேவலமாக இச் சிறுவர்கள் நடத்தப்படுவதாக இம் மாநாட்டில் சுவாமி அக்னிவேஷ் தெரிவித்தார்.

6-12 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியரே இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தமாநாட்டில் இந்தியா. பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பங்குபற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோண்சன் Johnson
[10 H. P.]

வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப் பாகங்களையும் மலிவு விலையில் வடபகுதியில் கொள்வனவு செய்ய நம்பிக்கையான ஒரே இடம்!

சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்



# உதயன்

04 - 07 - 1989 செவ்வாய்க்கிழமை



கடற்றொழிலாளர்களே!

8/4 மில்லி மீற்றர் ரேலர் மால், முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரேலர் மடி நூல் வகைகள்- போயா, வலை நூல் வகைகள்- கடற்றொழில் உபகரணங்கள் எதுவாகினும் தெரிவு செய்ய நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

சென். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர் யாழ்ப்பாணம்


செய்திச் சாரம்

## வெளியூர் தபால் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணத்துக்கான வெளியூர் தபால்கள் இன்று விநியோகிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக வவுனியாவில் தேங்கிக் கிடந்த வெளியூர் தபால் பொதிகள் வவுனியாவிலிருந்து பஸ்மூலம் நேற்று யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டன. (ஒ-10)

## வகுப்புகளுக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்-தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்புகளுக்குத் திரும்பினர்.

கடந்த 25ஆம் திகதி முதல் பாடசாலை மாணவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இவர்கள் விரிவுரைகளை பகிஷ்கரித்து வந்தனர். என்பது தெரிந்ததே. (ஒ10)

## சுகாதார வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் - மாநகர சபையின் சுகாதார வாரம் நேற்று ஆரம்பமாகியது.

யாழ்-மாநகரசபையின் பிரதேசங்களை துப்புரவாக வைத்திருத்தல், சுகாதாரத்தைப் பேணுதல் போன்றவற்றை மக்களிடையே வலியுறுத்தும் வகையில் சுகாதாரவாரம் கொண்டாடப்படும்.

இச்சுகாதார வாரத்தையொட்டி சுகாதாரக் கருத்துக்கள் அடங்கிய பதாகைகள் முக்கிய சில சந்திகளில் கட்டப்பட்டிருந்தன. (ஒ-3)

## அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 4

நீர்வேலியில் கடந்த 29ஆம் திகதி, சூட்டுக் காயத்துக்கு இலக்காகி மரணமான பெண்ணின் சடலம் நேற்றுவரை அடையாளம் காணப்படாததால் இன்று அரச செலவில் அடக்கம் செய்யப்படவுள்ளது இத்தகவலை யாழ்-பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-10)

## இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றின்போது இடையில் சிக்கி காயமடைந்திருந்த, இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

பாரதிபுரத்தைச் சேர்ந்த சுப்பையா முருகன் (வயது 19) என்ற இளைஞரே மரணமானவராவர். (ஒ-10)

## கல்விப் பணிப்பாளர் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4

கொழும்பில் இன்று நடைபெறும் கல்வித் திணைக்கள முக்கிய மாநாட்டில் பல விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

சகல கல்விப் பணிப்பாளர்களும் இம் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ-3)

## அரியாலையில் சூட்டுச் சம்பவம்

அரியாலை, ஜூலை 4

அரியாலை கொழும்புத்துறை பகுதியில் நேற்றுக்காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவியது. (ஒ-13)

## குரோமிக்கோ காலமானர்

மாஸ்கோ, ஜூலை 4

சோவியத் யூனியனின் பழம் பெரும் தலைவர் திரு. அன்றி குரோமிக்கோவ் நேற்று மாரடைப்பால் காலமானர். அவருக்கு வயது 79.

உலகில் நீண்டகாலமாக வெளியுறவு அமைச்சராக இருந்தவர் என்ற பெருமையைப் பெற்றவர் இவர்.

30 ஆண்டுகள் வெளியுறவு அமைச்சராக இருந்த அவர், திரு. கோர்பச்சேவ் பதவிக்கு வந்தவுடன் 1985இல் அதிகாரமற்ற ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். (ஒ-எ)

## கோர்பச்சேவ் இன்று பிரான்ஸ் விஜயம்

மாஸ்கோ, ஜூலை 4

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் திட்டமிட்டபடி இன்று (செவ்வாய்) பிரான்ஸுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்கிறார்.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் அன்றீ குரோமிக்கோவின் மரணம் காரணமாக அவரது விஜயம் ஒத்திவைக்கப்படலாம் என்றுமுன்னர் எதிர்பார்க்கப்பட்டது. (எ)

## தோட்ட லயனில் ஆயுதங்கள்

கொழும்பு, ஜூலை 4

ராகலையில் தோட்ட லயன் அறை ஒன்றில் இருந்து ஒரு சப்மெஷின் துப்பாக்கி மற்றும் 50 சுற்று ரவைகளை கடந்த சனிக்கிழமை பொலீஸார் கைப்பற்றினர்.

தமிழ் தீவிரவாதி ஒருவரையும் பொலீஸார் கைது செய்தனர்.

சென். லெனர்ட்ஸ் தோட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. (உ,எ)

## மட்டக்களப்பில் பயிற்சி முடிவு

மட்டக்களப்பு, ஜூலை 4

குடிமக்கள் தொண்டர் படையைச்சேர்ந்த 253 பேர் பயிற்சி முடிந்து வெளியேறுவதை ஒட்டி நேற்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் அணிவகுப்பு நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை அமைச்சர் ஜனப். அபுயூசுப் இந் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தொண்டர்படைக்குப் பொறுப்பான பொலீஸ் அத்தியட்சகர் திரு. ஆனந்தராஜாவும் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றினர். (உ-21)

## கிழக்கு வேலை நிறுத்தத்துக்கு காலக்கெடு

மட்டக்களப்பு, ஜூலை 4

மட்டக்களப்பில் போக்குவரத்துச் சபை ஊழியரின் வேலை நிறுத்தம் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் எனவும்-

கிழக்குப் போக்குவரத்துச் சபையின் சகல ஊழியர்களும் நாளை புதனன்று வேலைக்குத் திரும்ப வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் ஜனப். எம். அபுயூசுப் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

நேற்று மட்டுநகரின் கிழக்குப் போக்குவரத்துச் சபையின் தலைவர் ஜனப். முகமட் அலியுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினர். (உ-21)

## காங்கிரஸுடன் கூட்டு

சென்னை, ஜூலை 4

அ. இ. அ. தி. மு. க. வுக்கும் இ. காங்கிரஸ் கட்சிக்கும் இடையே தேர்தல் உடன்பாடு ஏற்படுவது உறுதி என்ற நிலை உருவாகி உள்ளது.

# கொழும்பு வேலை நிறுத்தம் மேலும் பரவியது!

கொழும்பு, ஜூலை 4

கொழும்பில் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று மேலும் பல அலுவலகங்களுக்கும் பரவியது.

போக்குவரத்துச்சபை ஊழியரின் வேலை நிறுத்தத்தினால் மக்கள் நடமாட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

போக்குவரத்து சபை பஸ்கள் தனியார் பஸ்கள் வீதிகளில் காணப்படவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில பஸ்களை பாதுகாப்புப்படையினர் ஓட்டிச்சென்றனர்.

அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச கூட்டுத்தாபன அலுவலகங்கள் கூட நேற்று முற்றாகச் செயல் இழந்தன. இந்த அலுவலகங்களில் ஐந்து சதவீத ஊழியர்கள் கூட வேலைக்குத் திரும்பவில்லை எனக் கூறப்பட்டது.

தனியார் வாகனங்கள் மட்டும் வீதிகளில் ஓடித்திரிந்தன.

கொழும்பில் வாழ்க்கைநிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. (உ-1)

# சர்வதேச இளைஞர் விழாவில் 'கைஸ்' பிரதிநிதி பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம், ஜூலை 4

பதினூருவது சர்வதேச மாணவர் இளைஞர் விழா வட கொரிய தலைநகரான பியாங்யங்கில் நடைபெறுகின்றது. இம் மாணவ இளைஞர் விழாவில் 160 நாடுகளைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

சர்வதேச மாணவ இளைஞர் விழாவில் இலங்கையைச் சேர்ந்த பதின்மூன்று மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றனர்.

முதன்முறையாக ஈழத்திலிருந்து மாணவர் இளைஞர் பொதுமன்றத்தின் கைஸ் ''சர்வதேச விவகாரக்குழு'' பொறுப்பாளர் விழாவில் பங்குபற்றுகின்றார். இவ்விழா ஜூன் 25 ஆம் திகதி ஆரம்பித்து ஜூலை 8 ஆம் திகதி வரை நடைபெறும். (ஒ)

## வடக்கு,கிழக்கு. ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் வாழும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். போக்குவரத்துச் சேவையிலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் கடந்த இரண்டு மூன்று தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார்.

இந்திய விமானப்படை விமானங்கள் நேபாம் குண்டுகளுடன் தமிழ்நாடு, கேரளம் ஆகிய இடங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது பற்றி கருத்து வெளியிடுகையில் —

''அமைதிப்படை ஹெலிகொப்டர்களை மட்டுமே பயன்படுத்தி வருகின்றது. நேபாம் குண்டுகளைப் பயன்படுத்தவில்லை. அதைப் பாவிக்கும் எண்ணமும் எமக்கு இல்லை''— என்று டாக்டர் ஜெய்சங்கர் சொன்னர்.

இதேவேளை வவுனியாவில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் ஈரப்பெரியகுளம் பகுதியிலும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பு ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ-1)

## 25,000 அடையாள....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மல் தப்பிச் செல்ல வாய்ப்பு ஏற்படும் எனக் கூறப்பட்டது.

அடையாளகார்ட் பறிமுதல் நடவடிக்கை தொடர்பாக பிரஸ்தாப பகுதிகளில் உள்ள வங்கிக்கிளைகளின் முகாமையாளர்களுக்கும் தீவிரவாதிகள் அறிவுறுத்தல் விடுத்திருக்கின்றனராம்.

தங்களிடம் அடையாளக் கார்ட்டுகளை பறிகெடுத்ததாக கூறுபவர்களிடம் வங்கி அலுவல்கள் மற்றும் பணம் மாற்றும் வேலைகளுக்கு அடையாள கார்ட் கேட்டு வற்புறுத்த வேண்டாம் என முகாமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறதாம். (உ-3-[illegible])

## புதிய பஸ் சாரதி,.,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டனர்.

எப்பாவல என்னும் இடத்தில் சீமன் சில்வா என்பவரை வெளியே இழுத்து வந்து மயானம் ஒன்றில் வைத்து இனந்தெரியாதவர்கள் சுட்டுக் கொன்றனர்.

கல்குலாம என்னும் இடத்தில் இரண்டு சடலங்களைப் பொலீஸார் கண்டெடுத்தனர். (ஒ-எ)

# ரயில்வே ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் குதிப்பு

கொழும்பு, ஜூலை 4

தெற்கில் ரயில்வே திணைக்கள ஊழியர்களும் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இதனால் தெற்கில் போக்குவரத்துச் சேவை நேற்று முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

ரயில்வே ஐக்கிய நடவடிக்கைக் குழு 9 கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் இறங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

★ குறைந்தது மாதச் சம்பளமாக 2 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படவேண்டும்.

★ பஸ் போக்குவரத்து ஊழியர் வேலை நிறுத்தத்துக்கு தீர்வு காண வேண்டும்.

★ ரயில் நிலையங்களில் காவலுக்கு நிற்கும் இராணுவ வீரர்களை விலக்க வேண்டும்,

★ சமயா சமய ஊழியர் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டும் — என்பன அவற்றில் சில.

### தபால் தந்தி ஊழியர்களும் வேலை நிறுத்தம்

தபால், தந்தித் தொடர்புத் திணைக்கள ஊழியர்களும் நேற்று வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

அதைத் தொடர்ந்து வேலை நிறுத்த நிலைமை மோசமடைந்தது. (உ-எ-21)

## ஈழப்பிரகடனம் குறித்து......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்பட்டுள்ளது.

### கட்டாய இராணுவப் பயிற்சி

இந்த நிலையில் அனைத்து மக்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சியை வழங்க நாம் தயாராக இருக்கிறோம்.

எமது மக்கள் மீண்டும் அகதிகளாகச் செல்லாமல் தடுக்கும் பொறுப்பும் கடமையும் எமக்குண்டு இதற்குக் கட்டாயப் படை. சேர்ப்பு அவசியமாகலாம்.

### முயற்சி

நாம் இப்பொழுது அனைத்து தமிழ் அமைப்புக்களையும் ஒன்றிணைக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

நாம் அமைக்கும் ''தமிழ் தேசிய மன்றம்'' இந்த மாதத்தில் கூடவுள்ளது.

எமக்கு நேச சக்திகள் வெளிநாடுகளிலும் உண்டு. வர்க்க ரீதியாக சர்வதேச ஜனநாயக சக்திகளின் ஆதரவு எமக்கு என்றும் உண்டு.

### வாபஸ் பெற வேண்டும்

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கில் சிவில் வேலைத் திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ஸ்ரீ லங்கா இராணுவத்தினரின் தலையீடுகள் தேவையில்லை.

இதேவேளை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டு வெளியே நடமாடத் தொடங்கினால், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

வடக்கு மாகாணத்தில் ஸ்ரீ லங்கா படையினரின் நடமாட்டங்கள் இப்போது அதிகரித்துள்ளன.

இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக வெளிநாட்டுச் சக்திகளின் ஏஜண்டுகள் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு வந்து, ஸ்ரீ லங்கா இராணுவ முகாம்களுக்குச் செல்கின்றனர்.

இது குறித்து இலங்கை அரசின் உயர் அதிகாரிகளிடம் கேட்டால் நிவாரண உதவிகள் குறித்து ஆராய வருவதாகக் கூறுகிறார்கள்.

இராணுவ உத்திகளை ஆராயவே இங்கு வருகின்றனர் என்பது தான் உண்மை.

### தெற்குப் போராட்டம்

தென்பகுதியில் நடைபெற்று வரும் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு ஈ. பி. ஆர். எல். எவ் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

இப் போராட்டங்கள் மக்களுடைய பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட நியாயமான போராட்டங்களாகும். எனவே இப் போராட்டத்துக்கு நாம் ஆதரவு வழங்குகிறோம்.

இதேவேளை, ஜே. வி. பியை பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஈ. பி. ஆர். எல். எவ். பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

தென்பகுதியில் நடைபெற்று வரும் போராட்டங்கள், பொருளாதாரப் போராட்டங்கள் என்பன குறித்தே பேச்சுவார்த்தைநடத்த விரும்புகிறோம்.

நாம் பேச்சுவார்த்தைக்குப் பகிரங்கஅழைப்பு விடுத்துள்ள போதிலும் ஜே. வி. பியின் பதில்எதுவும் இன்னும் கிடைக்கவில்லை. — இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விரிவுரைகள் 11இல் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூலை 4

கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை, வர்த்தகம், முகாமைத்துவ பீடம் மற்றும் கலாசார கற்கைநெறி பீடம் ஆகியவற்றிற்கான விரிவுரைகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-21)

## கிழக்கில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு

மட்டக்களப்பு, ஜூலை 4

கிழக்கு மாகாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (உ-21)

## மருத்துவ மாணவர் விடுவிப்பு

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பொரளை விடுதி ஒன்றில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்ட 37 மருத்துவ மாணவர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (உ-எ)

## பிரதமர்...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

கொள்வதன்மூலம் இலங்கை நெருப்புடன் விளையாடுகிறது என்றும் அமைச்சர் தொண்டமான் சொன்னர்.

இதேவேளை இஸ்லாமாபாத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை கலந்துகொள்ளும் என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# வதிரியில் நேற்று மோதல் சம்பவங்கள்

## மக்கள் இடம் பெயர்வு

கரவெட்டி, ஜூலை 4

வதிரியில், இரும்பு மதவடி என்ற இடத்தில் நேற்று திங்கட்கிழமை மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

சுமார் 5 மணித்தியாலங்களாக இந்த மோதல்கள் விட்டு விட்டு நடந்தன. ஷெல் வீச்சுகளும் இடம்பெற்றன. மாலை 4 மணிவரையும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் ஷெல் விழுந்து வெடிக்கும் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

ஷெல் வீச்சுக் காரணமாக மகனையைப் பகுதியி 13 வயதான கணேஷ சிறீக்குமார் காயமுற்றார். அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்,

ஷெல் வீச்சுக் காரணமாக இரும்புமதவடி, துலாக்கட்டு ஆகிய இடங்களைச் சேர்ந்த பல வீடுகள் சேதமுற்றன. அப்பகுதி மக்கள் அல்வாய் திக்கம், பொலிகண்டி ஆகிய இடங்களுக்கு அகதிகளாக அணிந்த ஆடைகளுடன் இடம்பெயர்ந்தனர்.

மேற்படி மோதல் சம்பவங்களால் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டன. (அ-70-160

# கொழும்புக்குத் தாமதமாக சென்றடைந்த வாகனங்கள்

கொழும்பு, ஜூலை 4

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த பஸ்களும் ஏனைய வாகனங்களும் நேற்று புளியங்குளத்தில் தடுத்து வைக்கப்பட்டன.

சுமார் ஒன்றரை மணிநேரம் இவ்வாறு தரித்து நின்றபின்னர், பல சோதனைகள், விசாரணைகளின் பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டன.

மீண்டும் வாகனங்கள் வவுனியாவில் நிறுத்தப்பட்டன பயணிகள் கீழே இறக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். குறிப்பாக இளைஞர்கள் தீவிர விசாரணைக்கு ஆளானர்கள். சில இளைஞர்களை தடுத்து வைக்க முயற்சிக்கப்பட்டது.

எனினும் பெற்றோர் அழுது புலம்பி அவர்களை மீட்டெடுத்துக் கூட்டி வந்தனர், அப்போதும் போக்குவரத்து தாமதமாகியது. (அ)

# அரச எதிர்ப்பு இயக்கம்

கொழும்பு, ஜூலை 4

அரசுக்கு எதிராக மாபெரும் மக்கள் இயக்கம் ஒன்றை முன் நடத்த வருமாறு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் அழைப்பு விடுத்திருக்கிறது.

மாணவர் அமைப்புக்களை அழித்து, பல்கலைக்கழகங்களை காலவரையின்றி மூட அரசு சதி செய்து வருகிறது. அதை முறியடிக்க மக்கள் ஒன்று திரண்டு இயக்கம் நடத்த வர வேண்டும்.

இப்படி சம்மேளனம் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளது. (ஒ-எ)

# மரண அறிவித்தல்கள்

## கணபதி - சுந்தரம்

(புகையிரதப்பகுதி சங்காணி)

காரைநகர் பலகாட்டைச்சேர்ந்த கணபதி சுந்தரம் 3 - 7 - 89 நேற்று காலமானர். அன்னரின் ஈமைக் கிரிகைகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு காரைநகர் நீலகிரி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைநகர்.

தகவல்:
ஜெயகோபால்

(1142)

## வேலுப்பிள்ளை கந்தையா

(சலியாணத் தரகர்)

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் பிறந்து வரும் மானிப்பாயில் வசித்துவரும் கண்மணியின் அன்புக் கணவர் வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் 28 - 6 - 89 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னரின் ஈமைக்கிரியைகள் வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. தவிர்க்கமுடியாத காரணத்தினுல் யாவருக்கும் அறிவிக்கமுடியாதமைக்கு வருந்துகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(1139)

## பெருமாள் ஐயாத்துரை

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த பெருமாள் ஐயாத்துரை 3 - 7 - 89 நேற்று காலமானர். இவர் காலம்சென்ற பெருமாள் தங்கம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சந்திரவதனு, பாலச்சந்திரன் (ஜேர்மனி), கமலவதனு, புனிதவதனு, புஷ்பவதனு பிறேமவதனு ஆகியோரின் அன்புத் தந்தையும், தவேஸ்வரன் [நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனியா], தேவராசா [ஆசிரியர், கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை], கந்தசாமி [தாய்வான்], தெய்வேந்திரம், கணேஷ் (சவுதி), லதா, பாலச்சந்திரன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனும், S S. சுந்தரராஜா, காலம்சென்ற தர்மராஜா அவர்களின் அன்பு மைத்துனரும் மனோகரனின் அன்புப் பெரிய தந்தையுமாவார். அன்னரின் இறுதிக் கிரிகைகள் இன்று செவ்வாய்க்கிழமை (4 - 7 - 89) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

தகவல்;
வே. தவேஸ்வரன்

இமையாணன்,
உடுப்பிட்டி.

(1039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 393/8 இல் உள்ள அச்சகத்தில் 04-07-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.